திருமதி த. ந. அனந்தநாயகி: பேரவைத் தலைவரவர்களே, மாதவரம் பால் பண்ணையிலிருந்து அனுப்பப்படுகின்ற் பால துர்நாற்றம் வீசுகின்றது என்றும், அது ஏன் என்று கேட்டால், பல ஊர்களிலிருந்து வருகின்ற பாலை யெல்லாம் ஒன்றாகச் சேர்ப்பதால்தான் எனறும் சொல்கிறார்கள். இந்தக் குறையைப் போக்க, பற்றாக்குறையை நீக்க, அரசு மற்றொரு பால் பண்ணையைத் தென் சென்னையிலே அமைக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இதற்கான பதில் அடுத்த கேள்வியில் கொடுக்கப்பட்டுள்ளது.

Second Dairy Project for Madras

* 65 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a Second Dairy Project is to be started by the Government near Guindy; and

(*b*) if so, whether the site has been selected and when the project is likely to commence functioning?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) தென் சென்னையில் இரண்டாவது பாற்பண்ணை ஒன்றைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

(இ) பாற்பண்ணைக்கான இடம் இன்னும் தெரிந்தெடுக்கப்படவில்லை.

Dr. H. V. HANDE: May I know from the Hon. Minister the total amount that is likely to be earmarked for this project, whether the financial commitment has already been gone through, whether the Government has already apportioned the necessary finance required for this, whether the land acquisition has taken place? Can the House get more details on this subject from the Hon. Minister? Is it a fact that the Government is also contemplating to improve the position of milk supply in the already existing Madhavaram milk colony by increasing the number of milch cattles and by increasing the facilities for milkmen there?

I would also like to know whether the Government is aware of the fact that a lot of milk is getting spoiled because good milk is being turned into toned milk by some scientific method which is in fact, in reality, becomes unnecessarily spoiled. Will the Government come forward to see that the public is spared from the toned milk? Will the Minister be able to enlighten us on these three points?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவரவர்களே, இரண்டாவது பால் பண்ணைத் திட்டம் ஒன்று தென் சென்னையில் அமைப்பதற்கான அனுமதி 11—3—1971-ல் வழங்கப்பட்டிருக்கிறது. மாதவரம் பால் பண்ணையில் போதுமான இட வசதி இல்லாத காரணத்தால், ஏனங்கள், பாட்டில்கள் ஆகியவற்றை ஏற்றிவரும் வண்டிகளை நிறுத்த இட வசதி இல்லாத காரணத்தால் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன. அதெல்லாவற்றையும்விட முக்கியமான காரணம், பால் விற்பனை அதிகமாகத் தென் சென்னையில்தான் இருக்

கிறது. பாலை எடுத்துச் செல்லும் கட்டணம் பால் வழங்குவதில் துறமை ஆகிய வற்றைக் கருத்திற்கொண்டு தென் சென்னை மற்றொரு பால் பண்ணை அமைப்பதற்கு சிறந்த இடமாகக் கருதப்படுகிறது. பால் பண்ணையை அமைப்பதற்கான இடத்தை விரைவிலேயே தேர்ந்தெடுக்க வேண்டுமென்று செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர், சென்னை மாவட்ட ஆட்சியாளர் மற்றும் நிபுணர்களும் சேர்ந்து 9 இடங்களை அதற்காகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவைகளை, இந்தியப் பால் பண்ணைக் கழகத்தின் நிபுணர்கள் 17—6—71 அன்று பார்வையிட்டிருக்கிறார்கள். வண்டிகளை நிறுத்துவதற்கான வசதிகள், பால் பண்ணைக் கழிவுகளை வெளியேற்ற வசதிகள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இந்த இடங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். விரைவிலேயே இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, வேலைகள் துவங்க இருக்கின்றன.

DR. H. V. HANDE: May I know whether there is any programme in Madhavaram area to improve the position?

MR. SPEAKER: The hon. Member must address the Chair.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Is that project going to be started by the Government alone or will there be any joint sector so far as this project is concerned?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அரசுத் துறையிலேயேதான் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, பால் பற்றாக்குறையை நீக்க, கல்காத்தாவிலிருந்து பைப்புகள் மூலமாகப் பால் வரப்போகிறது என்று பத்திரிகைகளில் செய்தி வந்தது. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, பம்பாயிலிருந்து கல்கத்தாவிற்கு செல்வதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். கல்கத்தாவிலிருந்து சென்னைக்கு வரக் கொஞ்சம் நாள் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானம்.

(ஆ) சென்னை நகரிலும் நகரைச்சுற்றியும் பெய்த பெருமழையால் குடிசைவாழ் மக்கள் அல்லல்.

MR. SPEAKER: I have received notice of an adjournment motion from Dr. H.V. Hande under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules to discuss a matter of urgent public importance, namely, the serious situation arising on account of the heavy down-pour of rains in and around the City of Madras and the consequent hardships caused to thousands of people living in the City Slums. I Call upon the Hon. Member to explain briefly as to how this comes under Rule 49.